
உ



இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார்
கோவிலில் எழுந்தருளி இருக்கும் வேலவன்
முத்துக்குமாரசாமியின் திருக் கல்யாண
நிகழ்வின் போது பாடப்படுபவை.

*2003*

உ



இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலில்
இணைந்திருந்து அருள் பாலிக்கும்
அருள்மிகு
**முத்துக்குமாரசாமியின்**
திருக்கல்யாண நிகழ்வினைத்
தொடர்ந்து இசைக்கப்படும்

# திருவூஞ்சல் பாமாலை

ஆக்கம்
பண்டிதை திருமதி வை. கணேசபிள்ளை

*2003*

## என்னுரை

இயற்கைவளம் செழிக்கும் இணுவையம் பதியிலே வள்ளி மனாளனாக எழுந்தருளி இருந்து அருள்பாளிக்கும் முத்துக்குமார சுவாமி மேல் பாடப்பட்ட திருவூஞ்சல் பாடல்களும், திருக்கல்யாண வைபவத்தில் திருக்கதவு திறக்கப்பாடும் "எட்டுக்குடி ஏலவர் ஏசல்" பாடல்களும் இந்நூலில் தொகுத்து வழங்கப்படுகிறது.ஆண்டு தோறும் முத்துக்குமார சுவாமிகள் திருக்கல்யாண வைபவத்தில் இசைக்கப்பட வேண்டும் என்னும் பெருவிருப்பத்தில் இத்தொகுப்பு இரண்டாம் பதிப்பாக வெளிவருகின்றது.

தொகுத்தளித்தவர்
இணுவையூர் கணபதிதாசன்
(திரு. சு. நடராசா ஆசிரியர்)
26-05-2012

ஸ்ரீ முத்துக்குமார சுவாமிகள்

## திருவூஞ்சல்



### காப்பு

செலுங்கலைகள் ஓங்குபதி திருவூராம்
இணுவையிலே கோயில் கொண்ட கோவே!
எழும்பிணியால் ஏங்குகின்ற அடியவர்தம்
மனத்துயரம் போக்கி அருள்பவனே!
பொழுதெல்லாம் கருணைமழை பொழியும்
கற்பக விநாயகனே பரராச சேகரனே!
வழுவிலா வரம்நல்கும் முத்துக்குமாரசாமி
திருவூஞ்சலாடப் பாடல் அருள்வாயே!

1

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவடியார்கள்
அகலாத அன்பதுவே வடங்களாக
முத்திபெற வழிகாட்டும் முத்தாரம்
ஞானிகளின் உள்ளமே பீடமாக
கொத்துமலர்க் கோதையர்கள் இருமருங்கும்
இருப்பச் சக்திபெறு முத்துக்குமரா!
அத்திமுகனுக்கு இளையவனே ஆடீரூஞ்சல்
இணுவைநகர் அருள்பொலிய ஆடீரூஞ்சல்

2 பக்தர்களும் முத்தர்களும் வாழிணுவைப்
பதியமர்ந்த பரமகுருவே ! பரம்பொருளே !
சித்திபெற விழிகாட்டிச் சிறந்தநல்
ஞானமெனும் வேலேந்தும் ஞானவேலா
அத்திமுகன் தம்பியே அருள்வேலா!
சிறுபிணிகள் அனுகாமல் காக்கும் கந்தா!
பத்தியொடு பரவுவார்க் கருள் சுரந்து
முத்திதரும் முத்துக்குமரா ஆடீரூஞ்சல்!

3 நாரணும் நாரதரும் துதிகள் பாட
நான்முகனும் தேவர்களும் வணங்கிநிற்ப
பூரணமாய்ப் பூதகணங்கள் பொலிந்து ஆட
நாமகளும் பூமகளும் வடந்தொட்டாட்ட
காரணமாய் நின்றஜோதிக் கணபதியும்
வாழ்த்துக்கூற எழில் முத்துக்குமரனாய்
ஓரணங்காய் எழிலுருவாய் அமர்ந்திருந்து
4 அடியார்தம் குறைதீர்க்க ஆடீரூஞ்சல்

தேன்சிந்தும் மாமலர்கள் நிறைந்த சோலை
தூங்காதே மலர்பறிக்கும் பக்தர்கூட்டம்
வான்சிந்தும் மாமழைக்கோ குறைவேயில்லை
வளமான வாழைகளும் குலைகள் போடும்
வான்முட்டும் தென்னைமரத் தோப்பின் கீழே
மாமரங்கள் பலாமரங்கள் கனிகள் சிந்தும்
நீங்காத செல்வமலி இணுவையூரில்
கோயில் கொண்ட முத்துக்குமரா! ஆடீரூஞ்சல்

5.

பக்தியொடு பூசனைகள் புரிந்துவாழும்
அந்தணர்கள் அடியவர்கள் சூழவாழும்
உத்தமரின் மந்திரங்கள் மணியோசை
ஒலிக்கநாளும் சிவபூசை சிறந்த கோயில்
தித்திக்க அருள்பொலியும் பரராசசேகரன்
அருகிருக்கப் பேறுபெற்ற முருகா !
முத்தமிழின் வித்தகனே முத்துக்குமரா
முதுமைதா னிலாதவனே ! ஆடீரூஞ்சல்

6.

வேதவொலி மந்திரங்கள் பூசனைகள் ஏற்று
அடியவர்தம் அவதியுறு வேதனைகள் கேட்டு
தீதகலப் திருவிழாப் பொலிவுகண்டு செல்வமலி
இணுவைநகர் கோயில் கொண்டாயுன்
சீதமதிக் குடைநிழற்கீழ் நம்பிவாழும்
அடியவர்க்கருள் சுரக்க ஆடீரூஞ்சல்
ஆதிஅயன் தேவர்களும் அருள் பெற்றுய்ய
முத்துக்குமரா ! மகிழ்ந்து ஆடீரூஞசல்

7.

பிரணவத்தின் பொருளுரைத்தாய் சிவகுருநாதா !
பெருங்கருணைக் கந்தா கலியுகவரதா !
வருமகந்தை தீர அயனாரின் தலையிற்குட்டிப்
பெருஞ்சிறையில் இட்டவனே முருகா
கருநாவற் பழம்கேட்ட ஒவைக்கருள்
சுரந்து சுட்டபழம் போட்டவனே யன்று
திருவாழுமிணுவை நகருறையும் முத்துக்குமரா !
அடியார்தம் அகந்தைகெட ஆடீரூஞ்சல்

8

காளையர்கள் காவடிகள் சுமந்தாடிவர
கன்னியர்கள் கற்பூரச்சட்டிகளை ஆர்வமுடனேந்திவர
வாழைக்குலைத்தோரணங்கள் வாயிலெலாம்
அலங்கரிக்க வானவர்கள் வந்துதுதிபாட
ஏழைக்கருள்பவனே ஏந்தலேயென்று பக்தர்குளாம்
பண்ணமைந்த பாடல்கள் பாடிவரக்களிக்கும்
காளைக்குமரேசனே ! கார்மயில்வாகனனே ! முத்துக்குமாரா !
அகிலமெலாமுய்ய அகமகிழ்ந்து ஆடீரூஞ்சல்

9

முத்தாரமின்னும் மணிகளாட மூவுலகுமாட
கொந்தார் குழலிகள் தொட்டாட கோனாட
வித்தாரமார்பில் உத்தரியமாட இரத்தினக்கிரீடமாட
ஞானவேலாட ஞானியர்கள் தாமாட
பக்தியொடு சிவனாட உமையாட
பக்தருடன் 'பாவையர்கள்' சேர்ந்தே ஆட
அத்தி முகத்தவனாட அவனியெல்லாம் சேர்ந்தாட
சித்திதரும் முத்துக்குமாரா ! ஆடீரூஞ்சல்

10.

நினைத்தவரம் தந்துவிடும் பரராச சேகரன்
அருகிருக்க அகமகிழ்ந்து ஆடீரூஞ்சல்
அனைத்து லகும் அருள்பொலிய ஆடீரூஞ்சல்
குறமகளும் குஞ்சரியும்ஆட ஆடீரூஞ்சல்
மனக்குகையில் இருளகற்ற ஆடீரூஞ்சல்
அறம்வளர அன்புகொண்டு ஆடீரூஞ்சல்
வினைதீர்க்கும் வேலவனாய் ஆடீரூஞ்சல்
முத்திதரும் முத்துக்குமாரனே ! ஆடீரூஞ்சல்

## வாழி

திருவிழிகள் பன்னிரண்டும் வாழி ! வாழி !

ஈராறு தோள்களும் வாழி ! வாழி !

பெரிய திருமறைகள் வாழி அரிய திருமறைகள் வாழி

வேத சிவாகமச் சைவ நெறி வாழி !

பேரிணுவைப் பதி வாழி! பெரும் பக்தர் வாழி !

ஆனினம்வாழி ! அந்தணர் வாழி ! மங்கையர் தாம் வாழி !

பெரிய திருவடிகள் வாழி ! ஞான வடிவேல் வாழி ! வாழி ! வாழி !

ஞாலமெலாம் வாழி! முத்துக்குமாரனே ! வாழி ! வாழி !

## ஜெயமங்களம்

முந்து தமிழ் உரைத்தவற்கு ஜெயமங்களம்

முழுதுலகும் ஆண்டவற்கு ஜெயமங்களம்

தொந்தி வயிறனுக்கு ஜெயமங்களம்

கந்த குமரேசனுக்கு ஜெயமங்களம்

செந்துதுாரில் இருப்பதற்கு ஜெயமங்களம்

செம்பவளக் குன்றனுக்கு ஜெயமங்களம்

தங்கமயில் வாகனற்கு ஜெயமங்களம்

தென்னிணுவை முத்துக்குமாரனுக்கு ஜெயமங்களம்

"மங்களம் ஜெயமங்களம்
சுப மஙகளம்"

**ஆக்கம்**
பண்டிதை வை. கணேசபிள்ளை

# எட்டிகுடி வேலவர் ஏசல்

## வெண்பா

1. மாசின்முரு கேசருக்கும் மாது தெய்வ யானைக்கும்
ஏசல்நே ரிட்ட தியம்பவே – காசினியிற்
செஞ்சடிவ நின்ற திகழ்யானை மாமுகத்தோன்
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு.

2. காசினி யோர் புகழ் எட்டிகுடி வேலவர்
கதவைத் திறக்கும் ஏசல் பாட – எழில்
கதவைத் திறக்கும் ஏசல் பாட.

3. மூஷிக வாகன மீதேறும் விநாயகன்
முளரி மலரடியே காப்பு – எழில்
முளரி மலரடியே காப்பு.

## நூல்

1. செய்யவடி வேலேந்தும் முருகர் வருகிற
செய்தி யறிந்தாள் அந்த மாது – தெய்வ
யானைறிந்தாள் அந்தப் போது

2. பரிவுடன் வடிவேலர் முருகர் வரவுணர்ந்து
படக் கென்றடைத்தாள் அப்போது – கதவைச்
சடக் கென்றடைத்தாள் இப்போது.

3. அடைத்த காரணம் தெரி யாமலே
ஆசையி னால்மதி மயங்கியே – அவள்
ஆசையினால்மதி மயங்கியே.

4. தட தட வெனவுள்ளே இணுவையிலே வந்து
தட்டினார் கையினால் தானே – கதவை
தட்டினார் கையினால் தானே.

5 சண்பக வதிசகி கதவைத் தட் டியே தட்டிக்
திறவென்று சொன்னவ ராரோ - இந்தக்
தெருவினில் வந்தவராரோ

6 எந்தன் கண்மணியே நீ அறியாயோ வந்தேன்
எட்டிகுடி வேலவர் நானே - பெண்ணே
எட்டிகுடி வேலவர் நானே

7 எட்டி குடியை விட்டு விரைவினில் இரவிலே
எப்படி வந்தீர் சொல்லும் சுவாமி - நீரோ
எப்படி வந்தீர் சொல்லும் சுவாமி

8
மாதேநின் முகமதி ஒளியைக் கண்டின்புற
மாதர சே இந்த வேளை - எழில்
மாதர சே இந்த வேளை

9 இந்த வேளை இரு காதவழி கடந்து
எவ்விதம் வந்தீர் சொல்லும் சுவாமி - இங்கே
எவ்விதம் வந்தீர் சொல்லும் சுவாமி

10 கட்டழகியே உன்னை மனத்தில் நினைந்த போதே
காத வழியும் இரு நாழியே - இரு
காத வழியு மிரு நாழியே

11 அரைநாழி உன்னை விட்டுப் பிரியாளே அந்தவள்ளி
அறியாமல் ஓடி வந் தீரோ - சுவாமி
தெரியாமல் ஓடி வந்தீரோ

12 அந்த வள்ளியை விட்டு உந்தன் முகத்தைக் காண
ஆசை கொண்டு காண வந்தேன் - பெண்ணே
ஆசை கொண்டு காண வந்தேன்

13.
காணவந் ததிலென்ன ஆயிர மாக வே
கைப் பொருள் கொண்டுவந் தீரோ - சுவாமி
காணிக்கை கொண்டுவந் தீரோ

14. வேண்டுமென் றதையெல்லாம் ஈண்டு நான் தருகிறேன்
விரைவுடனே சொல்லு வாயே - பெண்ணே
விரைவுடனே சொல்லுவாயே

15. சொல்ல வருவதில்லை உமது பொருளும் வேண்டாம்
துரிதத்தில் போவாய் நேயாள் வீடே - சுவாமி
துரிதத்தில் போவாய்நோயாள் வீடே

16. நேயமில்லா தவள் போலப் பேசுகின்றாய்
நித்திரை மயக்கமோ பெண்ணே - உனக்கு
நித்திரை மயக்கமோ பெண்ணே

17. நித்திரை தனைவிட்டு நீர் வருவீ ரென்று
நினைத் திருப்பாளே வள்ளி போம் போம் - சுவாமி
நினைத் திருப்பாளே வள்ளி போம் போம்

18. போமென்று நீர் சொல்ல நியாய மல்லவே நாம்
போனாலென்ன கெட்டுப் போகும் - பெண்ணே
போனாலென்ன கெட்டுப்போகும்

19. கெட்டுப் போகாந்தச் சட்டக் கல்விக ளெல்லாம
கேட்பவரார் சொல்லும் சுவாமி - இங்கு
கேட்பவரார் சொல்லும் சுவாமி

20. கேட்கச் சொல்லி உன்னை யாரடிக் கின்றாரிங்கே
கேவலம் எனையிக ழாதே - பெண்ணே
கேவலம் எனை யிக ழாதே

21. இகழவும் புகழவும் என்னாலா கா தந்த
இனிய வள்ளிக்கே யொக்கும் தானே - சுவாமி
இனிய வள்ளிக்கே ஒக்கும் தானே

22. ஒக்க வெனை அணைந்தால் உன்னை யினிப் பிரியேன்
உறுதி சொன்னேன் உலகறியவே - பெண்ணே
உறுதி சொன் னேன் உலகறியவே

23. மானிலம் புகழ் வடி வேலேந்து முருகரே
வார்த்தை பழக்கவந் தீரோ - சுவாமி
வார்த் தை பழக்க வந்தீரோ

24 வார்த்தை பழக்கிடநான் வல்லவ னல்லனுன்
மனதினிற் கோபஞ் செய் யாதே - பெண்ணே
மனதினிற் கோபஞ் செய்யாதே

25 போதும் போதும் இந்த உபசார வார்த்தைகள்
போதிக்க வந்திரோ சுவாமி - இங்கே
போதிக்க வந்தீரோ சுவாமி

26 கன்னியே யுன்மனம் இரங்காத தென்னேயிரு
கால்களும் நோவுதடி கண்ணே - எந்தன்
கால்களும் நோவுதடி பெண்ணே

27 முள்ளு மிதியடி முனைமேலே நிற்பாருக்கும்
முந்திக்கால் வலிக்குமோ சுவாமி - நல்ல
தந்திர வித்தைதான் சுவாமி

28 மரகத மேநல்ல மயிலே குயிலே நீ
வந்து கதவு திறப்பாயே - பெண்ணே
நொந்து மன திருக்காதே

29 கதவு திறக்க எனப் பதனமாய் பேசுகிறீர்
கைப்பொருள் கொண்டு வந்தீரோ - சுவாமி
செப்படி வித்தைகள் தானே

30 குன்றக் குடியினில் அன்று காணிக்கை வைத்த
கொலிசுகள் இருக் குவாதருகிறேன் - பெண்ணே
கொலிசுகள் இருக் குவ தருகிறேன்

31. பஞசணையில் வள்ளியைக் கொஞ்சிக் குலாவியவன்
பாதத்தில் அணிந்து நீர் பாரும் - நல்ல
சோதிப் பரபிபை அதுவாகும்

32. தைப்பூச நன்நாளிளிற் காணிக்கையா கத்தந்த
தண்டைக ளுண்டவை தருகிறேன் - பெண்ணே
கொண்டு கழிமகிழ் கூரே

33. வைத்த காதல் வள்ளி மகிழ மருவிநீரே
வைத்தவள் காலினிற் பாரும் - அவள்
சித்தம் மகிழ்ந்திடச் சேரும்

34. சித்திரா பூரணையிற் சேர்த்துவைத்திருக்கின்ற
செவ்வந்தி மாலைகள் தருகிறேன் - பெண்ணே
சினந் தணிந் தென்னுடன் சேரும்

35. தேவ தேவா இந்தப் பூருவ நகைகளைத்
திருடி எடுத்து வந்தீரோ - சுவாமி
திருடி எடுத்து வந்தீரோ

36. இந்திரலோ கத்து வெள்ளை யானை வந் திருக்கின்றது
காத்துக்கொ டுத்ததும் கையில் - சுவாமி
நீத்தெமைப் பிரியவோ கூறும்

37. கண்ணினாற் பார்ப்ப தென் பெண்ணாய் வளர் தென்னை
காத்துக்கொ டுத்ததும் கையில் - சுவாமி
நீத்தெமைப் பிரியவோ கூறும்

38. இந்தக் கதவினைத் திறக்கவே மந்திரம்
இருக்கினற தென்னிடம் பாரும் - பெண்ணே
சரித்திரம் காட்டுவேன் பாரும்

39. தட்டிக் கதவினைத் திறந்திடில் நானும்மைத்
தழுவி யணைகுவேன் சுவாமி - உம்மைக்
கெழுமி அணைகுவேன் பாரும்

40. ஐந்துடன் ஆறெழுத் துந்தியே தட்டிட
அக்கணந் திறந்தது தாழும் - சிந்தை
நெக் கணைந்தான் யானை மாதும்

41. தொல்லை முராரியால் தோன்றிய இருவேமும்
பன்னெடுங் கால் பிரிந்தோம் - சுவாமி
எல்லையில் காலம் மறந்தோம்

42 ஒல்லையில் கூட்டியே உடனறை வித்தீர் செய்ய
வல்ல கைமாறுண்டோ சுவாமி - உன்றன்
எல்லையில் கருணையே சுவாமி

43 அம்மையும் யானுன்றன் இளையவ ளாயினேன்
இம்மையும் இளையவளானேன் -என்னை
அம்மையே அளித்தரு ளாயே

44 இந்திரன் மாதுடன் எயினர் மாதும் இன்னே
சிந்தையுடன் உயிரு மொன்றானார் - நறுங்
கந்தமும் மலரும் போலானார்

45 வானமும் மையமும் வாழியே கந்தன் தெய்வ
யானையை வள் ளியோ டணைத்தார் - மகிழ்
தேவர்கள் பூமழை சொரிந்தார்

இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார், முத்துக்குமாரசாமி துணை

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

ஓம் சரவணபவ, ஓம் சரவணபவ, ஓம் சரவணபவ

கஜன் பிறின்டேர்ஸ்
கோண்டாவில்